People's Watch
No.6, Vallabai Road, Chokkikulam, Madurai - 625 002
Phone: +91-452-2531874 & 2539520 Fax: +91-452- 2531874
E.mail: info@pwtn.org Web: www.peopleswatch.org

A Network Towards Human Rights Monitoring, Intervention, Campaign, Research and Documentation
(A Programme Unit of the Centre for Promotion of Social Concerns)

11.10.2016

**அன்புடையீர்:**

வணக்கம், கீழ்க்காணும் செய்தியை தங்கள் நாளிதழ் / வார இதழ்/ மாத இதழ் தொலைக்காட்சியில் வெளியிடுமாறு அன்புடன் வேண்டுகிறோம்

# பத்திரிகை செய்தி

**சென்னை மணலியைச் சேர்ந்த ஸ்ரீகாந்த் பாலாஜி மீது காவல் துறையும் சிறைத் துறையும் கூட்டாக நடத்திய சித்திரவதையால் இராயப்பேட்டை மருத்துவமனையில் உயிருக்கும் போராடிக் கொண்டிருக்கிறார்.**

இது பற்றிய முதற்கட்ட கள ஆய்வில் ஸ்ரீகாந்த பாலாஜியின் மூத்த சகோதரர் அன்னா ராமோகர்துபே (தொடர்பு எண் 93809 37248) கூறியது.

கடந்த 03.10.2016 அன்று காலை சுமார் 7.00 மணி அளவில் மணலி காவல் நிலைய போலீசார், எனது தம்பி ஸ்ரீகாந்த பாலாஜி வீட்டிற்கு வந்து, விசாரணை என்ற பெயரில் அழைத்துச் சென்றனர். பின்னர் இரவு சுமார் 8.30 மணி அளவில் சார்பு ஆய்வாளர் குருமூர்த்தி தலைமையில் ஆட்டோவில் மீண்டும் வீட்டிற்கு வந்த போலீசார் விசாரணையின் போது ஸ்ரீகாந்த பாலாஜியின் சட்டை பட்டன் உடைநது விட்டது. வேறு சட்டை தாருங்கள் என்றனர். மேலும் செலவுக்கு பணம் ரூபாய் இரண்டாயிரம் தாருங்கள் என்று வாங்கிச் சென்றனர். அப்போது ஸ்ரீகாந்த பாலாஜி ஆட்டோவில் இருந்துள்ளான்.

இதன் பின்னர் ஸ்ரீகாந்த பாலாஜி புழல் சிறையில் அடைக்கப்பட்டதை அறிந்து உடனடியாக பிணை மனு தாக்கல்செய்தோம். 05.10.2016 அன்று மாலை பிணை உத்தரவு கிடைத்தது. உடனே மறுநாள் 06. 10.2016 அன்று காலையில் இருந்து மாலை வரை சிறைக்கு வெளியே கார்த்திருந்தோம். என் தம்பி ஸ்ரீகாந்த பாலாஜி வரவில்லை.

மீண்டும் மறுநாள் 07.10.2016 அன்று சென்ற போது சிறை அதிகாரி ஒருவர் என்னிடம் ஸ்ரீகாந்த் பாலாஜி உடல் நலக்குறைவின் காரணமாக சிகிச்சைக்காக சென்னை இராயப்பேட்டை அரசு பொது மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டுள்ளதாக தெரிவித்தார்.

உடனே நான் இராயப்பேட்டை மருத்துவமனைக்கு சென்றேன். அங்கு ஸ்ரீகாந்த பாலாஜிக்கு பிராணவாயு செலுத்தப்பட்டுக் கொண்டிருந்ததைப் பார்த்தேன். மேலும் உடலில் எந்த அசைவும் இல்லை. அங்கிருந்த மருத்துவரும் உயிர் பிழைக்க 10 % வாய்ப்பு உள்ளது என்றார்.

**மக்கள் கண்காணிப்பகத்தின் கண்டனம்**

இச்செயல் காவல் துறையும் சிறைத்துறையும் இணைந்து நடத்திய சித்திரவதையாகவும் மனித உரிமை மீறலாகவும் உள்ளது. மேலும் சென்னை மாநகரம் தொடர்ந்து சித்திரவதையின் தலைநகரமாகவே காணப்படுகிறது என்பதற்குக் கீழ்க்காணும் சம்பவங்களே சான்றாக உள்ளன.

- ✮ கடந்த மாதம் மீன்குழம்பு கார்த்திக் என்பவர் சென்னை கண்ணகி நகர் காவல் நிலையத்தில் காவல் மரணம் அடைந்துள்ளார்.
- ✮ புழல் சிறையில் சுவாதி வழக்கில் கைதான ராம்குமார் மரணம் அடைந்துள்ளார்.
- ✮ புழல் சிறையில் பேரறிவாளன் மீது கொலைவெறித் தாக்குதல் நடைபெற்றுள்ளது.
- ✮ சமூக ஆர்வலர் பியூஸ் மானுஸ் சேலம் சிறையில் தாக்கப்பட்டுள்ளார்.

இப்போது ஸ்ரீகாந்த் பாலாஜி தாக்கப்பட்டு இராயப்பேட்டை மருத்துவமனையில் உயிருக்குப் போராடிக் கொண்டிருக்கிறார்.

இத்தகைய மோசமான உடல் நிலையில் இருக்கும் ஸ்ரீகாந்த் பாலாஜியை சென்னை இராயப்பேட்டை மருத்துவமனையில் கொண்டு சேர்த்தது யார்

புழல் சிறைக்குள் அடைக்கப்படும் போது அவருடைய உடலில் காயம் இருந்ததா?

இது தொடர்பான தகவல்களை காவல்துறையும், சிறைத்துறையும் வெளிப்படையாகத் தெரிவிக்க வேண்டும்

கடந்த சில நாட்களாக தமிழக முதல்வர் மருத்துவமனையில் இருந்தாலும், தமிழ்நாட்டில் நிர்வாகம் சீராக உள்ளது. சட்டம் ஒழுங்கு அமைதியாக உள்ளது என்று அரசு தரப்பில் கூறப்படுகிறது.

ஆனால் உண்மை நிலை இதற்கு நேர்மாறாக உள்ளது. குறிப்பாகத் தலைநகர் சென்னையில் காவல் துறையின் அத்துமீறல் நாளுக்கு நாள் அதிகரித்துக் கொண்டிருக்கிறது என்பதற்கு மேற்குறிப்பிட்ட சம்பவங்களே சாட்சியாக உள்ளன

இத்தகைய மனித உரிமை மீறல்களை சித்திரவதைகளை மக்கள் கண்காணிப்பகம் வன்மையாகக் கண்டிக்கிறது.

மேலும் காவல் துறையும் சிறைத்துறையும் கூட்டாக நடத்திய தாக்குதலில் உயிருக்குப் போராடிக் கொண்டிருக்கும் ஸ்ரீகாந்த் பாலாஜி உயிர்பிழைக்க உரிய நடவடிக்கை எடுக்க அரசு தலையீடு செய்யக் கோருகிறது.

இப்படிக்கு

(ஹென்றி திபேன்)